ச. வெ. எண் : 445 நாள் : 4. 8. 2009

அடையாறு பூங்கா – பத்திரிகை குறிப்பு

அடையாறு பூங்காவின் பெருந்திட்ட வரைவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2007 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வெளியிட்டார். சுற்றுப்புற சூழல் சீரமைப்பு திட்டத்தின் கீழ் 100 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்திலான பூங்கா அமைக்கப்படுகிறது. முதற்கட்டமாக 58 ஏக்கர் நில பரப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. ஆரோவில்லைச் சேர்ந்த பிச்சாண்டிகுளம் வன ஆலோசகர் குழுமத்திற்கு இப்பணியைச் நிறைவேற்ற ஜூன் மாதம் 2008 ஆம் ஆண்டு ஆணை வழங்கப்பட்டது. இப்பணிகள் நவம்பர் மாதம் 2010ம் ஆண்டு நிறைவுப்பெறும். மேலும் இப்பணிகளை மேற்பார்வை செய்வதற்கு INMAAS என்னும் நிறுவனம் நியமிக்கப்பட்டது.

இப்பூங்காவில், இதுவரை 216 வகைகளைச் சேர்ந்த 65000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும் 20000 மரக்கன்றுகள் (மொத்தம் 85000) நடப்படவுள்ளது. இது தவிர சதுப்பு நிலக் காடுகள் உருவாக்கப்படவுள்ளன. மொத்தமுள்ள 350000 கனமீட்டர் கட்டிட கழிவு மற்றும் திடக்கழிவுகளில் இதுவரை 250000 கனமீட்டர் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 60000 கனமீட்டர் சென்னை மாநகராட்சியால் கூறப்பட்ட இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மீதமுள்ளது, பூங்காவிற்குள் பாதை அமைத்தல் மற்றும் இதர பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. இந்த மண் மாதிரிகளை சோதனை செய்யப்பட்டதில், இவற்றில் நச்சுத்தன்மை இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த மண்குவியலின் மேல் தாவர வகைகள் நடப்பட்டுள்ளன.

தற்காலிக தாவர நாற்றங்கால் பராமரிப்பு குடில் அடிப்படை வசதிகளுடன் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதில் சென்னையைச் சேர்ந்த உள்ளூர் தாவர வகைகள் பெரும்பாலும் இடம் பெற வகை செய்யப்பட்டுள்ளது. அடையாறு நீரின் தன்மை மற்றும் நீர் வாழ் தாவரங்கள் தன்மையை எடுத்துக்காட்ட வல்ல மாதிரி நன்னீர் குளம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மழைநீர் ஓடை மற்றும் இதர ஓடைகளின் மேல் 5 மரப்பாலங்கள் அமைக்கப்படவேண்டும். இதில் ஒரு மரப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது இத்திட்டதில் உள்ள கற்பகம் அவின்யூ பாலமும், சுற்றுப்புற சுழல் கல்வி மையமும் அமைக்கப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

இப்பூங்கா புனரமைப்புப் பணிகளின் பயனாய், பலதர வகைக்கப்பட்ட பறவைகளும் பூச்சி இனங்களும் இனப்பெருக்கம் செய்து வருகின்றன. இது போன்று பலவகை மீன்களும் இங்கு காணப்படுகின்றன. இப்பூங்காவின் சுற்றுச் சுழல் பெருமளவு அபிவிருத்தி அடைந்துள்ளது. புனரமைப்புத் திட்டதின் சாதனை பெருக்கத்தை காண்பிக்க வல்ல பலவித ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அண்ணா பல்கலைக்கழகம் பூங்காவின் நீரின்தரத்தை ஆய்வு செய்து வருகிறது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பூங்காவிற்கு அவ்வப்போது வருகை தந்து ஆய்வு செய்து உரிய ஆலோசனைகளை வழங்கி வருகிறார். அடிப்படை வசதிகளுடன் கூடிய தற்காலிக தாவர நாற்றங்கால் குடிலை இன்று திறந்துவைத்தார்கள். மேலும் இந்த ஆய்வின் போது திட்ட பணிக்காலம் குறித்தும் நிலுவையில் உள்ள பணிகள் செய்ய வேண்டியது குறித்தும் அலுவலர்களுக்கு விரைவில் முடிக்கக்கூறி உத்தரவு வழங்கினார்கள். இந்த ஆய்வின்போது மேயர் திரு.மா.சுப்பிரமணியன், துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலர் திரு தீனபந்து அவர்கள், திரு நிரஞ்சன் மார்டி செயலாளர், நகர நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, திரு. பணீந்தர ரெட்டி, உறுப்பினர் செயலர், அடையாறு பூங்கா பொறுப்பாட்சி, திரு, ராஜேஷ் லக்கானி, ஆணையர், சென்னை மாநகராட்சி, TNUIFSL மற்றும் சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த அலுவலர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் ஆகியோர்கள் உடனிருந்தனர்.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9